1983 பிப்ரவரி 5] (திரு. தி. கா. நல்லப்பன்)

தொழிலாளர்களின் பிராவிடண்ட் பண்ட் போன்ற பிரச்னைகளில் முழுமையாக செயல்படாமல் இருப்பதை செயலுக்கு கொண்டு வரவேண்டுமென்று கேட்டு அமாகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவை தற்காலிகத் தலைவர் அவர்களே, அவை முன் வைத்திருக்கிற தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த அறிக்கையின் மூன்றாவது பத்தியில் மாண்புமிகு உறுப்பினர்களின் எண்ணங்களில் மின் சக்தி வழங்கப்படும் நிலைமையே மேலோங்கி இருக்கும் என்பது இயல்பானது என்றும், கடைசி பத்தியில் முக்கியமான இந்த பிரச்னை மீது மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஆழ்ந்த கருத்துக்கள் பெரிதும் பயன் தரும் என்றும், ஆகவே கருத்துக்களை வழங்க வேண்டுமென்றும் நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை அடிப்படையாகக் கொண்டு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கு முன்னர் பேசிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் தந்ததைப்போன்று புள்ளி விவரங்களை நான் அதிகமாகப் புகுத்தாமல், மாண்புமிகு அமைச்சரைப் போலவே, கிராமப்புறத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற வகையில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன். ''சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கு மின் ஒளியும் அறிவொளியும் மிகமிகத் தேவை. இந்த இரண்டு ஒளியும் இடையறாது சமுதாயத்திற்கு வழங்கப் பட்டால்தான் சமுதாயம் எதிர்பார்த்த அளவிற்கு இந்த விஞ்ஞான யுகத்திலே முன்னேறும்'' என்று புரட்சித் தலைவர் லெனின் அவர்கள் ரஷியாவிலே குறிப்பிட்டார்கள். இப்பொழுது கல்வி ஓரளவுக்கு வளர்ந்திருந்தாலும், மின்சாரத் துறையிலே ஏற்பட்ட இன்னல்களை இந்த நேரத்திலே நாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. இந்த ஆண்டு இயற்கை பொய்த்த காரணத்தால் எவ்வளவு தொல்லைகள் வந்திருக்கின்றன என்பதை நாடு அறிகிறது. நஞ்சைப் பயிரான நெல், கரும்பு, கடலை, வெங்காயம், மிளகாய் அனைத்தும் பரவலாகவும், குறிப்பாக பெரம்பலூர் தொகுதியிலேயும் நாசம் அடைந்து போய் விட்டது. மின் தட்டுப்பாடு உள்ள காரணத்தால் என்பதை நான் அறுதியிட்டுத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மழை பெய்யாத காரணத்தால், புஞ்சைப் பயிர்களான கடலை கொத்தமல்லி போன்ற கிராமப்புறத்திலே இருப்பவர்களுக்கு வருமானம் தருகிற பயிர்களும் நாசமாகிப் போய்விட்டன; அவைகளையெல்லாம் முன்கூட்டியே தடுத்திருக்க வேண்டுமென்பது என்னைப் போன்றவர்களுடைய வாதமாகும். மின் தட்டுப்பாடு வரும் என்பதை அறிந்திருந்தும்கூட போதுமான நிலக்கரியோ நல்ல பழுதுபடாத இன்ஜினோ, நிலக்கரி வருவதற்கு வாகன வசதியோ கிடைக்காது அல்லது கிடைக்கவில்லை என்பதை அறிந்திருந்தும்கூட அதைத் தடுப்பதற்குப் பல